2 DEC 2016
UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலை கலாசார பீடம்

## மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு

## 2013/2014 (May/June 2016)

## GY 3112 Regional Geography – Indian Sub Continent

நேரம் : 02 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

பகுதி I இல் இருந்து ஒரு வினாவினையும் பகுதி II இல் இருந்து இரு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

### பகுதி I

1. அ. தென்னாசிய நாடுகளது காலநிலை தொடர்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் ஐந்தினைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

   ஆ. தென்னாசிய நாடுகளில் யாதாயினும் ஒரு நாட்டினைத் தெரிவு செய்து அந்நாட்டின் தரைத்தோற்ற பாங்குகளில் காணப்படும் வேறுபாடுகள் பிரதேச ரீதியான காலநிலை வேறுபாடுகளுக்கு எந்தளவுக்கு அடிப்படையாக அமைகின்றது என்பதை விளக்குக. (25 புள்ளிகள்)

2. வங்காளதேசத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்படுவதற்கான காரணங்களை விளக்கி, இவ் அனர்த்தத்திலிருந்து விடுபடுவதற்கு நீர் முன்வைக்கும் ஆலோசனைகளை விளக்குக. (30 புள்ளிகள்)

### பகுதி II

3. அ. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஐந்து ஆண்டுத் திட்டங்களை கால ரீதியாக வகைப்படுத்துக. (05 புள்ளிகள்)

   ஆ. மூன்று ஓராண்டுத் திட்டங்கள் (1966 – 1969) அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் இந்திய விவசாயத்தில் ஐந்தாண்டுத் திட்டங்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக விளக்குக. (30 புள்ளிகள்)

4. அ. தென்னாசிய நாடுகளில் நகராக்கச் செயற்பாடு துரிதமடைந்து வருவதற்கான காரணங்களை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. "தென்னாசிய நாடுகளில் நகராக்கம் காரணமாக சமூக, பொருளாதார, சூழல் பிரச்சினைகள் தீவிரமடைந்து வருகின்றன" இக்கூற்றினை ஏற்றுக்கொள்கின்றீரா? உமது கருத்தினை ஏதாவதொரு தென்னாசிய நாட்டினை உதாரணமாகக் கொண்டு விளக்குக.

(25 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றுள் ஏதாவது இரு தலைப்புக்கள் தொடர்பாக சுருக்கக் கட்டுரை வரைக.

அ. சேது சமுத்திரக் கால்வாய் திட்டமும் சூழலியல் தாக்கங்களும்.

ஆ. சம்பூர் அனல்மின் திட்டமும் ஏற்படக்கூடிய விளைவுகளும்

இ. தென்னாசிய நாடுகளின் விவசாயத்தில் பசுமைப் புரட்சியின் தாக்கங்கள்

(17½ X 2 = 35 புள்ளிகள்)